**தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை– 600 025**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| தேர்வு வாரியத் தலைவர்,<br>தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,<br>கிண்டி, சென்னை – 600 025 | அனைத்து அரசு / அரசு உதவி பெறும் மற்றும்<br>சுய நிதி பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர்கள் |

**கடித எண். 111147/எம்.1/2022, நாள்.29/07/2022**

ஐயா / அம்மையீர்

பொருள்: தேர்வு பிரிவு – தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் – பட்டயத் தேர்வுகள் ஏப்ரல் 2022 – விடைத்தாள்களை மறுமதிப்பீடு மற்றும் மறுகூட்டல் – தொடர்பாக.

பார்வை:
1) அரசாணை நிலை எண்.244 உயர் கல்வி (பி1)துறை, நாள்.31/07/2001
2) கடித எண் 8860/பி/2002–1 உயர்கல்வித்(பி1)துறை , நாள்.9.7.2002

---------

பார்வையில் காணும் அரசாணை மற்றும் அரசு கடிதத்தில் பட்டயத் தேர்வுகளுக்கான மறுமதிப்பீடு மற்றும் மறுகூட்டல் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல்– 2022 க்கான பட்டயத் தேர்வு முடிவுகள் 29.07.2022 அன்று வெளியிடப்பட உள்ளது. பொறியியல் இரண்டாமாண்டு நேரடி மாணாக்கர்களுக்கு சேர்க்கைக் (Lateral Entry) கான கலந்தாய்வு 18.08.2022 முதல் நடைபெற உள்ளது. இதனால், இதற்கு விண்ணப்பிக்கும் மாணாக்கர்கள், முதல் விடைத்தாள் நகலுக்கும் பிறகு மறுமதிப்பீடு மற்றும் மறுகூட்டல் கேட்டு விண்ணப்பிக்கும் பட்சத்தில், உரிய நேரத்தில் கலந்தாய்விற்கு முன்பதாக மாணாக்கர்களுக்கு தேர்வு முடிவுகள் வெளியிட இயலாது. எனவே, Lateral Entry சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் மாணாக்கர்களின் நலனை கருத்தில் கொண்டு, கீழ்க்கண்டவாறு விரைவில் மறுமதிப்பீடு மற்றும் மறு கூட்டல் முடிவுகளை வெளியிட அந்தந்த கல்லூரி முதல்வர்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**கல்லூரி முதல்வர்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்**

Lateral Entry சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் மாணாக்கர்களுக்கு மட்டும் மறுமதிப்பீடு மற்றும் மறுகூட்டல் கேட்டு விண்ணப்பிக்க இந்த ஒரு முறை மட்டும் விடைத்தாள் நகலுடன் மறுமதிப்பீட்டிற்கும் சேர்த்து விண்ணப்பிக்கவும் ரூ.500/– (ரூ.100/– +ரூ.400/–) வசூலிக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் மறுமதிப்பீடு மற்றும் மறுகூட்டல் கேட்டு விண்ணப்பிக்கும் மாணாக்கர்களின் விண்ணப்பங்களை ஒருங்கிணைத்து **http://112.133.214.75/DipExOnline/** என்ற இணையதளத்தில், இணைய வழியில் மட்டும் கல்லூரி முதல்வர் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.

**கட்டணம் செலுத்தும் முறை**

விடைத்தாள் நகல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை **(Not Using Exam fees Challan form) Additional Director (Exam) in SB Account No.479134712 and Bank IFSC Code No.IDIB000D050 Indian Bank, DOTE Office Branch** இணைய வழியில் செலுத்த வேண்டும்.

**Lateral Entry சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் மாணாக்கர்களுக்கு மட்டும்**

| | | |
|---|---|---|
| பட்டயத் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் நாள். | : | 29.07.2022 வெள்ளி |
| Scan Copy, மறுமதிப்பீடு மற்றும் மறுகூட்டல் விண்ணப்பிக்க ஆரம்ப நாள் (விண்ணப்பக் கட்டணம் ரூ.500/–) | : | 29.07.2022 வெள்ளி |
| Scan Copy, மறுமதிப்பீடு மற்றும் மறுகூட்டல் விண்ணப்பிக்க கடைசி நாள் | : | 04.08.2022<br>வியாழன் மாலை 5.30 வரை |
| மறுமதிப்பீடு மற்றும் மறுகூட்டல் தொடங்கும் நாள்<br>(56 விடைத்தாள் திருத்தும் மையம்) | : | 10.08.2022 புதன் |
| முடிவுகள் வெளியிடப்படும் நாள் | : | 12.08.2022 வெள்ளி |

**மற்ற அனைத்து மாணாக்கர்களுக்கு**

| | | |
|---|---|---|
| பட்டயத் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் நாள் | : | 29.07.2022 வெள்ளி |
| மறுமதிப்பீடு விண்ணப்பிக்க அறிவிப்பு வெளியிடப்படும் நாள் | : | 29.07.2022 வெள்ளி |
| Scan Copy விண்ணப்பிக்க கடைசி நாள் | : | 12.08.2022<br>வெள்ளி மாலை 5.30 வரை |
| Scan Copy தொடர்பான தகவல்களை கல்லூரிகளிலிருந்து இணையவழியில் பெறும் நாள் | : | 29.07.2022 வெள்ளி முதல்<br>12.08.2022 வெள்ளி மாலை 5.30 வரை |
| மதிப்பீட்டு மையங்களில் இருந்து அசல் விடைத்தாள்களை பெறுவதற்காக தகவல் அனுப்பும் நாள் | | 01.08.2022 திங்கள் முதல்<br>16.08.2022 செவ்வாய் வரை |
| விடைத்தாள்களை மதிப்பீட்டு மையங்களில் இருந்து தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் பெறப்படும் நாள் | | 08.08.2022 திங்கள் முதல்<br>17.08.2022 புதன் வரை |
| விடைத்தாள்கள் Scan செய்யப்படும் நாள் | | 22.08.2022 திங்கள் முதல்<br>25.08.2022 வியாழன் வரை |
| கல்லூரிகளுக்கு Scanned Copies பதிவேற்றம் செய்யும் நாள் | | 26.08.2022 வெள்ளி |
| மறுமதிப்பீடு மற்றும் மறுகூட்டல் விண்ணப்பிக்க கடைசி நாள் | : | 29.08.2022 திங்கள் |
| மறுமதிப்பீடு மற்றும் மறுகூட்டல் தொடர்பான தகவல்களை கல்லூரிகளிலிருந்து இணையவழியில் பெறும் நாள் | : | 26.08.2022 வெள்ளி முதல்<br>02.09.2022 வெள்ளி வரை |
| விடைத்தாள்களை மறுமதிப்பீடு மற்றும் மறுகூட்டல் செய்தல் மற்றும் மதிப்பெண் பட்டியல்களை வட்டார அலுவலர்–III பிரிவிலிருந்து கணினி பிரிவிற்கு அனுப்பும் நாள் | | 05.09.2022 திங்கள் முதல்<br>06.09.2022 செவ்வாய் வரை |

| | | |
|---|---|---|
| மதிப்பெண் பட்டியல்களை அடுத்தகட்ட நடவடிக்கைக்காக கணினி பிரிவிலிருந்து வட்டார அலுவலர்–III பிரிவிற்கு அனுப்பும் நாள் | | **07.09.2022** புதன் |
| சரிபார்க்கப்பட்ட மதிப்பெண் பட்டியல்களை வட்டார அலுவலர்-III பிரிவிலிருந்து கணினி பிரிவிற்கு அனுப்பும் நாள் | | **08.09.2022** வியாழன் |
| தேர்வு முடிவு வெளியிடப்படும் நாள் | | **09.09.2022** வெள்ளி |

**ஓம்/–**
**தேர்வுவாரியத் தலைவர்**